# யூலை – 28 – பொதுக்கால 17ம் வார ஞாயிறு

**“நான் மன்றாடிய நாளில் எனக்கு செவிசாய்த்தீர், எனது மனதிற்கு வலிமை அளித்தீர்” திபா. 138:3**

---

## முதல் வாசகம் : தொடக்க நூல் 18 : 20 - 32

அக்காலத்தில் ஆண்டவர் ஆபிரகாமை நோக்கி, ”சோதோம் கொமோராவுக்கு எதிராகப் பெருங்கண்டனக்குரல் எழும்பியுள்ளது. அவற்றின் பாவம் மிகவும் கொடியது. என்னை வந்தடைந்த கண்டனக்குரலின்படி அவர்கள் நடந்து கொண்டார்களா இல்லையா என்று அறிந்துகொள்ள நான் இறங்கிச்சென்று பார்ப்பேன்” என்றார். அப்பொழுது அந்த மனிதர்கள் அவ்விடத்தை விட்டுச் சோதோமை நோக்கிச் சென்றார்கள். ஆபிரகாமோ ஆண்டவர் திருமுன் நின்று கொண்டிருந்தார். ஆபிரகாம் அவரை அணுகிக் கூறியதாவது ”தீயவரோடு நீதிமான்களையும் சேர்த்து அழித்து விடுவீரோ? ஒருவேளை நகரில் ஐம்பது நீதிமான்களாவது இருக்கலாம். அப்படியானால் அதிலிருக்கிற ஐம்பது நீதிமான்களை முன்னிட்டாவது அவ்விடத்தைக் காப்பாற்றாமல் அழிப்பீரோ? தீயவனோடு நீதிமானையும் அழிப்பது உமக்கு ஏற்றதன்று. நீதிமானையும் தீயவனையும் சமமாக நடத்துவது உமக்கு உகந்ததன்று. அனைத்துலகிற்கும் நீதிவழங்குபவர் நீதியுடன் தீர்ப்பு வழங்க வேண்டாமோ?” என்றார். அதற்கு ஆண்டவர், ”நான் சோதோம் நகரில் ஐம்பதுநீதிமான்கள் இருப்பதாகக்கண்டால், அவர்களின் பொருட்டு முழுவதையும் காப்பாற்றுவேன்” என்றார். அப்பொழுது ஆபிரகாம் மறுமொழியாக, ”தூசியும் சாம்பலுமான நான் என் தலைவரோடு பேசத்துணிந்துவிட்டேன். ஒருவேளை அந்த ஐம்பது நீதிமான்களில் ஐந்துபேர் குறைவாயிருக்கலாம். ஐந்துபேர் குறைவதை முன்னிட்டு நகர்முழுவதையும் அழிப்பீரோ?” என்றார். அதற்கு அவர், ”நான் நாற்பத்தைந்து பேரை அங்கே கண்டால் அழிக்கமாட்டேன்” என்றார். மீண்டும் அவர், உரையாடலைத் தொடர்ந்து, ”ஒருவேளை அங்கே நாற்பதுபேர் மட்டும் காணப்பட்டால் என்ன செய்வீர்?” என்றுகேட்க, ஆண்டவர், ”நாற்பது நீதிமான்களின் பொருட்டு அதனை அழிக்கமாட்டேன்” என்றார், அப்பொழுது ஆபிரகாம் ”என்தலைவரே, நான் இன்னும் பேசவேண்டும் சினமடைய வேண்டாம். ஒருவேளை அங்கே முப்பதுபேரே காணப்பட்டால்? என, அவரும் ”முப்பதுபேர் அங்குக் காணப்பட்டால் அழிக்கமாட்டேன்” என்று பதிலளித்தார். அவர், ”என்தலைவரே, உம்மோடு அடியேன் பேசத்துணிந்துவிட்டேன். ஒருவேளை அங்கு இருபதுபேரே காணப்பட்டால்?” என, அதற்கு அவர், ”இருபதுபேரை முன்னிட்டு நான் அழிக்கமாட்டேன்” என்றார். அதற்கு அவர், ”என் தலைவரே, சினமடைய வேண்டாம் இன்னும் ஒரே ஒரு தடவை மட்டும் என்னைப் பேசவிடும். ஒருவேளை அங்கு பத்துப்பேர் மட்டும் காணப்பட்டால்?” என, அவர், ”அந்தப் பத்துப்பேரை முன்னிட்டு அழிக்க மாட்டேன்” என்றார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே! நான் மண்றாடிய நாளில்
எனக்குச் செவிசாய்த்தீர்.

## இரண்டாம் வாசகம் : கொலோசேயர் 2 : 12 - 14

சகோதரர் சகோதரிகளே! நீங்கள் திருமுழுக்குப் பெற்றபோது அவரோடு அடக்கம் செய்யப்பட்டீர்கள். சாவிலிருந்து அவரை உயிர்த்தெழச் செய்த கடவுளின் ஆற்றல்மீது கொண்டுள்ள நம்பிக்கையால் அவரோடு நீங்களும் உயிர்பெற்று எழுந்துள்ளீர்கள். உடலில் விருத்தசேதனம் செய்து கொள்ளாதவர்களாயும் குற்றங்கள் செய்பவர்களாயும் வாழ்ந்ததால் நீங்கள் இறந்தவர்களாய் இருந்தீர்கள். கடவுள் உங்களை அவரோடு உயிர்பெறச் செய்தார். நம் குற்றங்கள் அனைத்தையும் மன்னித்தருளினார். நமக்கு எதிரான ஒப்பந்த விதிகள் பல கொண்ட கடன்பத்திரத்தை அவர் அழித்துவிட்டார். அதைச் சிலுவையில் வைத்து ஆணியடித்து அறவே ஒழித்துவிட்டார்.

## நற்செய்தி : லூக்கா 11 : 1 - 13

அந்நாட்களில் இயேசு ஓரிடத்தில் இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார். அது முடிந்ததும் அவருடைய சீடர்களுள் ஒருவர் அவரை நோக்கி, ”ஆண்டவரே, யோவான் தம்சீடருக்கு இறைவனிடம் வேண்டக் கற்றுக்கொடுத்ததுபோல் எங்களுக்கும் கற்றுக்கொடும்” என்றார். அவர் அவர்களிடம், ”நீங்கள் இறைவனிடம் வேண்டும் பொழுது இவ்வாறு சொல்லுங்கள் தந்தையே, உமது பெயர் தூயதெனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! எங்கள் அன்றாட உணவை நாள்தோறும் எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோர் அனைவரையும் நாங்கள் மன்னிப்பதால் எங்கள் பாவங்களையும் மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத் தாதேயும். (தீயோனிடமிருந்து எங்களை விடுவித்தருளும்”) என்று கற்பித்தார். மேலும் அவர் அவர்களை நோக்கிப் பின்வருமாறு கூறினார் ”உங்களுள் ஒருவர் தம் நண்பரிடம் நள்ளிரவில் சென்று, ”நண்பா, மூன்று அப்பங்களை எனக்குக் கடனாகக்கொடு. என்னுடைய நண்பர் ஒருவர் பயணம் செய்யும் வழியில் என்னிடம் வந்திருக்கிறார். அவருக்குக் கொடுக்க என்னிடம் ஒன்றுமில்லை” என்று சொல்வதாக வைத்துக் கொள்வோம். உள்ளே இருப்பவர், ”எனக்குத் தொல்லை கொடுக்காதே. ஏற்கெனவே கதவு பூட்டியாயிற்று. என்பிள்ளைகளும் என்னோடு படுத்திருக்கிறார்கள். நான் எழுந்திருந்து உனக்குத் தரமுடியாது” என்பார். எனினும் அவர் விடாப்பிடியாய்க் கதவைத் தட்டிக்கொண்டேயிருந்தால் அவர் தம் நண்பர் என்பதற்காக எழுந்து கொடுக்காவிட்டாலும், அவரது தொல்லையின் பொருட்டாவது எழுந்து அவருக்குத் தேவையானதைக் கொடுப்பார் என நான் உங்களுக்குச் சொல்கிறேன். மேலும் நான் உங்களுக்குச் சொல்கிறேன் கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும் தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள் தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும். ஏனெனில் கேட்போர் எல்லாரும் பெற்றுக்கொள்கின்றனர் தேடுவோர் கண்டடைகின்றனர் தட்டுவோருக்குத் திறக்கப்படும். பிள்ளை மீனைக் கேட்டால் உங்களுள் எந்தத் தந்தையாவது மீனுக்குப் பதிலாகப் பாம்பைக் கொடுப்பாரா? முட்டையைக் கேட்டால் அவர் தேளைக் கொடுப்பாரா? தீயோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணகத் தந்தை தம்மிடம் கேட்போருக்குத் தூய ஆவியைக் கொடுப்பது எத்துணை உறுதி! என்றார்.”

**தியானம் :** பொதுக்காலத்தின் ஞாயிறு வார இறைவார்த்தைப் பகுதிகள் செபத்தின் முக்கியத்துவத்தைப் பற்றியும், நாம் எவ்வாறு செபிக்க வேண்டும் என்பது பற்றியும், எமது நாளாந்த வாழ்வில் செபத்தின் மூலமாக தந்தையாகிய இறைவனுடன் உறவு கொண்டிருக்க வேண்டியதன் அவசியத்தையும் அவை வலியுறுத்துகின்றன. குறிப்பாக இன்றைய முதல் வாசகத்தில் ஒரு குழந்தை தனது தந்தையை அணுகுவது போல அன்போடும், நம்பிக்கையோடும் ஆண்டவர் திருமுன் நின்று நன்றியுணர்வோடு அவரைப் புகழ்ந்து ஆபிரகாம் தனது வேண்டுதலை சமர்ப்பிக்கின்றார். அவ்வாறே சீடர்களிடமிருந்த ஆர்வத்தின் காரணமாகவே இயேசு மிகச்சிறந்த செபம் ஒன்றை நமக்கு விட்டுச் சென்றுள்ளதை இன்றைய நற்செய்தியில் பார்க்கின்றோம். இயேசு கற்றுக்கொடுத்த செபம் அவர் வாழ்ந்த வாழ்வின் வெளிப்பாடு. அதே உறவில் நாமும் நிலைத்திருக்க இயேசு எம்மை அழைக்கின்றார். செபித்தலில் ஆர்வமுள்ள மனிதன் கடவுளை மட்டுமல்ல தன்னையும் கண்டுகொள்கிறான். அப்படிப்பட்ட மனிதர்கள் மட்டுமே இறையாட்சியின் கருவிகளாக செயற்பட வேண்டும்.